**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

U/S-173 BNSS முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8120325

1. District : சிவகங்கை
மாவட்டம்
PS: ஊழல் தடுப்பு
காவல்நிலையம் மற்றும் கண்காணிப்புப் பிரிவு
Year: 2024
ஆண்டு
FIR No.: 10/2024
மு.த.அ. எண்
Date: 16.10.2024
நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988,
Sections பிரிவுகள்: 7 (a) and 12
(ii) Act சட்டம்: as amended by the P.C (Amendment)
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Act 2018
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 03.10.2024
நாள் முதல்
Date to : 14.10.2024
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை
(b) Information Received at PS. Date : 16.10.2024
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 07.00 hrs
நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Vol-III
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 07.45 hrs
நேரம்

4. Type of Information : Written/ Oral : எழுத்து மூலமாக
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 20 கி.மீ கிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் ஊராட்சி மன்ற அலுவலகம், காளையார்கோவில்.
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address :
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : காளீஸ்வரன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : மாயழகு
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 43/2024
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : இந்தியன்
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : ஆடு வளர்ப்பு மற்றும் ஆட்டுக்கறி வியாபாரம்
தொழில்
(g) Address : க.எண். 54 & 55, S.S. நகர், காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம்
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திருமதி. ஜோஸ்பின்மேரி, க/பெ. அன்னிராஜ், ஊராட்சி மன்ற தலைவர், காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம்.
2. திரு. அன்னிராஜ் (ஊராட்சி மன்ற தலைவரின் கணவர்), காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— No delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 16.10.2024 தேதி காலை 07.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில், S.S.நகர், க.எண்.54 & 55 என்ற முகவரியில் வசிக்கும் மாயழகு என்பவரின் மகன் திரு.M.காளீஸ்வரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட காளையார்கோவில் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.ஜோஸ்பின்மேரி மற்றும் அவரது கணவர் திரு.அருள்ராஜ் ஆகியோரைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 16.10.2024-ம் தேதி 07.45 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Kaleeswaran [signature]

A. Kannan
INSP<VAC
16/10/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16.10.2024 at 08.15 hrs.

Name: பெயர் ...A. கண்ணன்...
Rank: நிலை ....................No. எண்..........
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு,
சிவகங்கை

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.10/2024 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

பிரிவு குற்ற எண்.10/2024 u/s.7(a) and 12 of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் M.காளீஸ்வரன், த/பெ.மாயழகு, க.எண்.54 & 55, S.S.நகர், காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை. ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் ஆடு வளர்ப்பு மற்றும் ஆட்டுக்கறி வியாபாரம் செய்து வருகிறேன். நான் காளையார்கோவிலில் உள்ள சோமநாதமங்கலம் குரூப் புல எண்.25/12C-ல் பட்டா எண்.9699ல் கிருஷ்ணா நகர் மேற்கில் எனது மனைவி செந்தாமரை பெயரில் 114 சதுர மீட்டர் பரப்பளவில் காளையார்கோவில் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அப்ரூவல் பெற்று வீடு கட்டியுள்ளேன். தற்போது, அதே வீட்டில் சுமார் 1000 சதுர அடி பரப்பளவில் மேல் தளம் கட்ட கட்டிட வரைபட அனுமதிக்காகவும், வங்கி கடன் பெறுவதற்காகவும் வீட்டு வரி ரசீது தேவைப்பட்டது. எனவே, நான் புதிதாக கட்டியுள்ள மேற்படி வீட்டிற்கு வீட்டுவரி ரசீது வேண்டி, கடந்த 26.08.2024ம் தேதி காளையார்கோவில் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் வீட்டின் புகைப்படத்துடன் மனு கொடுத்து, வீட்டு வரி இரசீதிற்கான தொகையையும் செலுத்திவிட்டேன். இதுசம்மந்தமாக கடந்த 03.10.2024ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில், நான் காளையார்கோவில் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு சென்றபோது, ஊராட்சி மன்ற தலைவர் திரு.ஜோஸ்பின் மேரி ஆபிஸ்க்கு வரவே மாட்டாங்க, அவருடைய கணவரும் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவருமான திரு.அருள்ராஜ்தான் எல்லாத்தையும் பார்த்துக்கொள்கிறார், அவரைப்பாருங்க அவர் சொன்னால்தான் வீட்டு வரி இரசீது போட்டுத்தர முடியும் என அங்கிருந்த குமார் என்பவர் சொன்னார். எனவே, நான் அங்கிருந்த திரு.அருள்ராஜை சந்தித்து, எனது வீட்டு வரி இரசீது சம்மந்தமாக கேட்டதற்கு, அவர் என்னிடம் வீடு எத்தனை சதுரம் என்று கேட்டார், நான் அவரிடம் 12 சதுரம் என்று சொன்னேன், பின்னர் அவர் பஞ்சாயத்து ஆபிஸ்க்கு செலவு நிறைய இருக்கு, அதனால வீட்டு வரி இரசீது போட்டு தருவதற்கு ரூ.10,000/- கொடுத்தால்தான் இரசீது போட்டு தர முடியும் என்று சொன்னார். நான் ஒன்றும் பேசாமல் வந்துவிட்டேன். மறுநாள் 04.10.2024 மதியம் சுமார் 1.00 மணியளவில் காளையார்கோவில் ஜெயம் டைல்ஸ் கடைக்கு அருகே நின்றுகொண்டிருந்த மேற்படி திரு.அருள்ராஜ் அவர்களை சந்தித்தபோது, அவர் என்னிடம் பணம் ரூ.10,000/-த்தை கொண்டுவந்திருக்கியா என்று

கேட்டார், நான் அவரிடம் வீடு கட்டியதில், ரொம்ப கடன்ல இருக்கிறேன், கொஞ்சம் பார்த்து செய்யுங்க என்று சொன்னேன். அதற்கு அவர் சரி, ரூ.5000/- கொடுத்துட்டு வீட்டு வரி இரசீதை வாங்கிட்டு போ என்று சொன்னார். பின்னர் நான் அங்கிருந்து வந்துவிட்டேன். ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.ஜோஸ்பின்மேரி அலுவலகத்திற்கு வராததால், போனில் பேசி வீட்டு வரி இரசீது வாங்கிவிடலாம் என நினைத்து, கடந்த 14.10.2024ம் தேதி மதியம் சுமார் 01.14 மணிக்கு எனது அலைபேசி எண்.9942765079-லிருந்து காளையார்கோவில் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.ஜோஸ்பின் மேரியை அவரது அலைபேசி எண். 9442318805-ல் தொடர்புகொண்டு என்னை அவரிடம் அறிமுகப்படுத்திக்கொண்டு, வீட்டு வரி இரசீது தொடர்பாக பேசியபோது, அவர் சரியாக டவர் கிடைக்கவில்லை, மற்றொரு எண் மூலம் பேசுவதாக தெரிவித்துவிட்டு, லைனை கட் பண்ணிட்டு, உடனே மற்றொரு செல் நம்பர். 8220474805-லிருந்து எனது செல் எண்ணிற்கு தொடர்புகொண்டு பேசினார், அப்போது நான் அவரிடம், "அம்மா நான் கிருஷ்ணா நகர் மேற்கே புதியதாக கட்டியுள்ள வீட்டிற்கு வீட்டு வரி இரசீது கேட்டு 1 மாதத்திற்கு முன்னால் மனு கொடுத்திருக்கிறேன்" என்றபோது அவர், "நீங்க சாருக்கிட்ட பேசிக்கொள்ளுங்கள்" என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், "அம்மா சாரை பார்த்தேன், சார் வீட்டு வரி இரசீது போடுறதுக்கு ரூ.10,000/- கேட்டாங்க, அப்புறம் நான் குறைக்கச்சொல்லி கேட்டதனால, இப்ப ரூ.5000/- கொடுக்கச் சொல்லுறாங்க, நான் ரொம்ப கஷ்டத்துல இருக்கிறேன், அதான் அம்மாக்கிட்ட கேக்குறேன், அம்மா சொன்னீங்கன்னா வீட்டு வரி இரசீது போட்டு கொடுத்துடுவாங்க" என்று சொன்னதற்கு அவர் என்னிடம், "அதான் சார் ரூ.10,000/-லிருந்து குறைச்சு ரூ.5000/- கொடுக்கச் சொல்லிருங்காங்கள்ல, இதுக்குமேல குறைக்க முடியாது, நீங்க சார் (ஊராட்சி மன்ற தலைவரின் கணவர் திரு.அருள்ராஜ்) கேட்ட பணத்தை கொடுத்திட்டு, இரசீது வாங்கிக்கொள்ளுங்கள்" என்று தெரிவித்துவிட்டார். எனக்கு லஞ்சம் கொடுத்து வீட்டு வரி இரசீது பெற விருப்பம் இல்லை. என்னிடம் வீட்டு வரி இரசீது போட்டு தருவதற்கு லஞ்சம் கேட்ட ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.ஜோஸ்பின்மேரி மற்றும் அவரது கணவர் திரு.அருள்ராஜ் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/-xxxxx, 16.10.2024.

Sir, Received the complaint on 16.10.2024 at 07.00 hrs, genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the

complaint. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai, and registered a case in Sivagangai V&AC Crime.No.10/2024 u/s 7(a) and 12 of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 on 16.10.2024 at 07.45 hrs and took up for investigation. sd.A.Kannan, Inspector of Police, V&AC, 16.10.2024.

இந்த வழக்கின் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

A. Kannan
InsP/VAC
16/10/2024